ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2371/40 - 2024 පෙබරවාරි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.02.15
2371/40 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVKB/LND/LA/DSKAQ/10.
காணி அமைச்சின் இல.: 4-3/5/2019/HA/262.

கொபெய்கனே பிரதேச செயலகத்திற்காக கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கொபெய்கனே பிரதேச செயலாளர் பிரிவில் இல. 1308, அரளுகஸ்வெவ கிராம அலுவலர் பிரிவில் இஹல அரளுகஸ்வெவ கிராமத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.10.30 ஆம் திகதியின் கடத்திரல் வரைபட இல. 420722 இல் தொகுதி இல. 03, தாள் இல. 1 இல் காணப்படும் 0.4846 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் :

01. **துண்டு இல. 1**
காணியின் பெயர் : கஹட்டகஹமுலஹேன, கோண்கஹமுலஹேன; விபரம் : வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர் : காணி மறுசீரமைப்பு ஆணைக் குழு, கொபெய்கனே பிரதேச செயலகத்திற்காக தேவைப் பட்டுள்ளது; விஸ்தீரணம் : 0.4846 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம்

ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொபெய்கனே பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டப். திலிணி நிஸன்சலா சில்வா,
பிரதேச செயலாளர்,
கொபெய்கனே.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கொபெய்கனே,
2024, பெப்புருவரி 09.

EOG 02 - 0109